அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி
சத்தியமங்கலம் வட்டம், ஈரோடு மாவட்டம்.
அ.கு.எண் **638 401 – ✆ (04295) 243289.**

வேலை வாய்ப்பு அறிவிப்பு

ஈரோடு மாவட்டம், பண்ணாரி அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயிலில் காலியாகவுள்ள கீழ்க்கண்ட பணியிடங்களுக்கு தகுதி வாய்ந்த இந்து மதத்தைச் சார்ந்த நபர்களிடமிருந்து உரிய படிவத்தில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் இத்துடன் இணைக்கப்பட்ட மாதிரிப் படிவத்தில் கண்டுள்ளவாறு உரிய விபரங்களை பூர்த்தி செய்து உரிய சான்றிதழ்களையும் இணைத்து விண்ணப்பங்களை துணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில் பண்ணாரி – **638 401** என்ற முகவரிக்கு **15. 4. 2017**–ம் தேதி மாலை **5.45** மணிக்குள் வந்து சேருமாறு அனுப்பி வைக்க வேண்டும். இந்த அறிவிப்பு தேதிக்கு முன்னரோ இறுதி தேதிக்கு பின்னரோ வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

| வ. எண். | பதவியின் பெயர் | ஊதிய விகிதம் | காலியிடம் | தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1. | <u>உள்துறை</u> பூசாரி | PB – 9 Rs. 5200 – 15900 GP Rs. 2000 | 5 (ஐந்து) | 1. எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>2. இந்து சமய அறநிலையத்துறை அல்லது ஏதாவது இந்து மத நிறுவனத்தால் நடத்தப்படுகின்ற ஆகம பயிற்சி நிறுவனத்தில் ஓராண்டு படித்ததற்கான சான்று பெற்றிருக்க வேண்டும்.<br>3. மந்திரம், வேதம் மற்றும் திருமுறைகளை தினசரி பூஜை நேரத்திலும், திருவிழா மற்றும் குடமுழுக்கு காலங்களிலும் ஓதும் திறன் படைத்தவராக இருக்க வேண்டும்.<br>4. திருக்கோயிலில் அபிசேகம் செய்யத் தெரிந்தவராகவும், போதுமான திறனும் அறிவும் பெற்றிருக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | பரிச்சாரகர் | PB–7<br>Rs.4100–10000<br>GP Rs.1400 | 1<br>ஒன்று | 1. 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>2. இத்திருக்கோயிலின் பழக்க வழக்கம் மற்றும் மரபுகளின் படி செய்யப்படும் நெய்வேத்தியம் மற்றும் பிரசாதங்களை தயார் செய்யும் திறன் வாய்ந்தவராக இருக்க வேண்டும்.<br>3. ஏதாவது ஒரு திருக்கோயிலில் ஐந்தாண்டுகளுக்கு குறைவில்லாமல் மேற்கண்ட பணி புரிந்தமைக்கான சான்று பெற்றிருக்க வேண்டும். |
| 3. | நாதஸ்வரம் | PB - 9<br>Rs.5200–15900<br>GP Rs. 2400 | 1<br>ஒன்று | 1. எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>2. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரால் அங்கீகரிக்கப்பட்ட நாதஸ்வரம் தவில் பள்ளியில் 3 ஆண்டுகள் படிப்பிற்கான பயிற்சியில் சான்று பெற்றிருக்க வேண்டும்.<br>3. நாதஸ்வரம் இசைக்கருவியை நன்கு இசைக்கத் தெரிந்தவராகவும், தவில், தாளம், நாதஸ்வரம் உள்ளிட்ட வித்வான்கள் அடங்கிய இசைக்குழுவை ஒருங்கிணைத்து வழி நடத்தும் தகுதி பெற்றவராக இருக்க வேண்டும். |

## நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரருக்கு 01.03.2017–ல் 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். 45 வயதுக்குட்பட்டு இருக்க வேண்டும்.

2. இந்து மதத்தைச் சார்ந்தவராக தகுதியானவர்களாக இருத்தல் வேண்டும். ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

3. தொற்று நோய் உடல் அல்லது மனநிலை குறைபாடுகள் உள்ளவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.

4. நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள், பட்ட கடனை தீர்க்க முடியாதவர்கள் என நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டவர்கள், அரசுப்பணியிலிருந்தும் பொது ஸ்தபானங்களில் இருந்தும் இதர திருக்கோயில்களில் இருந்தும் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், அவர்களின் வாரிசுதாரர்கள் ஆகியோர்கள் மேற்படி பணிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.

5.நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும். இதற்கு அரசிதழ் பதிவு பெற்ற அரசு அலுவலரிடமிருந்து பெறப்பட்ட நன்னடத்தைச் சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

6. இந்த வேலை வாய்ப்பு அறிவிப்பு வெளியிடும் தேதிக்கு முன்னதாக வரப்பெற்ற விண்ணப்பங்களும் 15.4.2017 ம் தேதி மாலை 5.45 மணிக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்களும் மாதிரிப் படிவத்தில் கண்டுள்ளவாறு தேவையான விபரங்கள் மற்றும் இணைப்புகளுடன் வரப்பெறாத விண்ணப்பங்களும் மாதிரிப் படிவத்தின் படி இல்லாமல் வேறு வகையில் உருவாக்கப்பட்ட விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

7. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்கும் அந்த பதவிக்குரிய கல்வி மற்றும் இதர தகுதிச் சான்றுகள் மற்றும் இதர விவரங்களுடன் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு சேர்த்து ஒரே விண்ணப்பமாக அளித்தால் நிராகரிக்கப்படும்.

8. விண்ணப்பம் அனுப்பப்படும் மேலுறையின் மீது கண்டிப்பாக பதவியின் பெயர் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும்.

9. வரப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு தகுதியுள்ள நபர்களுக்கு மட்டுமே நேர்முகத் தேர்விற்கு அறிவிப்பு அனுப்பப்படும்.

10. நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.

11. நேர்முக தேர்வுக்கு தேர்ந்தெடுக்கப்படும் நபரை எவ்வித காரணங்களும் கூறாது நிராகரிக்கவும், பணி நியமனம் வழங்காமலிருக்கவும் திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

12. தேர்வு செய்யப்படும் நபர் சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரின் அங்கீகாரத்திற்கு பின்னரே நியமனம் செய்யப்படுவர்.

13. பணி நியமனம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சட்ட விதிகளுக்குட்பட்டவை.

14. விண்ணப்பதாரர் நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும். மருத்துவத் தகுதிச்சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

15. விண்ணப்பங்களுடன் அனுப்பப்படும் அனைத்து சான்றிதழ்களும் அரசிதழ் பதிவு பெற்ற அரசு அலுவலர் சான்றொப்பம் பெறப்பட்ட புகைப்பட நகல்களாக மட்டுமே இருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றிதழ்களை அனுப்பக்கூடாது.

16. அசல் சான்றிதழ்கள் அனைத்தும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கும் போது எடுத்து வர வேண்டும்.

17. ஏற்கனவே விண்ணப்பித்திருந்தாலும், இவ்விளம்பரத்திற்குப் பின்னர் புதியதாக விண்ணப்பிக்க வேண்டும்.

18. இதர விபரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

இங்ஙனம்

வீ. புருசோத்தமன்,

இரா. ராஜப்பா,

ராஜாமணி தங்கவேல்,

புஷ்பலதாகோதண்டராமன்,

வீ. மகேந்திரன்.

( பரம்பரை அறங்காவலர்கள்)

நா. பழனிக்குமார், பி.எஸ்சி.,பி,எல்.

துணை ஆணையர் / செயல் அலுவலர்.

இடம் பண்ணாரி.

நாள் 14. 3. 2017

<u>மாதிரி விண்ணப்ப படிவம்</u>

போட்டோ

பாஸ்போர்ட் சைஸ்

விண்ணப்பிக்கப்படும் பதவியின் பெயர்

1. பெயர்

2. தந்தையின் பெயர்

3. நிரந்தர முகவரி

4. கைபேசி எண்

5. மதம் ( சாதி மதச்சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்.)

6. பிறந்த தேதி மற்றும் வயது (சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்.)

7. கல்வித் தகுதி மற்றும் இதர தகுதிகள் (சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்.)

8. மேற்படி பணிக்கான முன் அனுபவம் இருப்பின் (சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்.)

9. நன்னடத்தை சான்று (அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளிடமிருந்து )

10. பொது.

<u>சான்றிதழ்</u>

மேலே கூறப்பட்ட வரிசை எண் 1 முதல் 9 வரையிலான விபரங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் நான் இந்து சமயத்தைச் சார்ந்தவன் என்றும் இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

நாள்

இடம் விண்ணப்பதாரரின் கையொப்பம்.